செ.வெ.எண்.530/2021 நாள்.15.11.2021

## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைத்தீர்வு கூட்டரங்கில் குழந்தைகள் பாதுகாப்பு உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் எடுக்கொண்டார்கள்.

## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சைல்டுலைனின் சார்பில் குழந்தைகள் தின வார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைத்தீர்வு கூட்டரங்கில் குழந்தைகள் பாதுகாப்பு உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் எடுக்கொண்டார்கள்.

இந்திய குடிமகனாகிய நான் சாதி , மதம், இனம் மொழி, சமூக பொருளாதார பாகுபாடு இல்லாமல் அனைத்து குழந்தைகளையும் சமமாக நடத்துவேன். எனது எனது செயல்பாடுகளால் எந்த ஒரு குழந்தைகளையும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்காத வகையில் கவனமுடன் நடந்து கொள்வேன். எனது கவனத்திற்கு வரும் குழந்தைகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் எந்தவொரு பாதிப்பையும் தடுப்பதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவேன் .மேலும் இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வேன். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என உணர்ந்து அவர்களின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கு என்னால் இயன்ற பங்களிப்பை அளிப்பேன். குழந்தை திருமணம் பற்றி தெரிய வந்தால் அதை தடுத்து நிறுத்துவதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவேன். நான் குழந்தை தொழிலாளர்கள் இல்லாத சமூகத்தை உருவாக்கிட உறுதுணையாக இருப்பேன். இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான உரிமைகளை அனைத்து குழந்தைகளுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுவேன் என்ற குழந்தைகள் பாதுகாப்பு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்கள் எடுக்கொண்டார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குழந்தைகள் நடைபெற்ற குழந்தைகள் தினம் 14.11.2021 முன்னிட்டு சைல்டுலைனின் சார்பில் குழந்தைகள் தின வார விழா குழந்தைகள் தினம் 14.11.2021 முன்னிட்டு சைல்டுலைன் குழந்தைகள் தின வார விழா (14.11.2021 முதல் 19.11.2021) தேதி வரை திருப்பத்தூர் மாவட்டத்தில்

கொண்டாடப்படுகிறது. இதன் முதற்கட்டமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் பரிசு பொருட்களை வழங்கி குழந்தைகள் தின வார விழாவை துவக்கி வைத்தார்கள். இதனை தொடாந்து குழந்தைகள் தினத்தில் பிறந்த நாள் காணும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சைல்டுலைன் பிறந்த நாள் வாழ்த்து மடல்களையும், சைல்டு எல்பலைன் எண்களையும், குழந்தைகள் தின விழா வாழ்த்து மடல்களையும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.வில்சன்இராசசேகர், மாவட்ட சைல்டுலை இயக்குநர் திரு.அசோக்குமார், சைல்டுலைன் திட்ட இயக்குநர் செல்வி.பவானி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.கிருஷ்ணமூர்த்தி, சைல்டுலைன் ஒருங்கிணைப்பாளர் திரு.ஜெயகமல் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.